(ஆ) அரசினர் உறுதிமொழிக் குழுவின் அறிக்கை.

திரு. ஒ. சோ. வேலுச்சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. அரசினர் உறுதிமொழிக் குழுவின் மூன்றாவது (ஆறாவது சட்ட மன்றப் பேரவை) அறிக்கையை அளிக்கிறேன்.

7. அரசினர் தீர்மானம்

விதி 21 உள்விதி 3-ன் கீழ்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விதி 21, உள்விதி 3 இன் கீழ் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன் :

''இனம் 4. அரசினர் சட்ட முன்வடிவு என்று இருப்பதை நீக்கி, இனம் 5, 1979–80ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும், வாக்கெடுப்பும், என்று இருப்பதை எடுத்துக் கொள்ள வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, ஒருமனதாக நிறைவேற்றப்பெற்றது.

2. ஒழுங்குப் பிரச்சினை—தொடர்ச்சி.

உறுப்பினர் திரு. கிட்டப்பா வீட்டில் கோவில் சிலை இருந்ததாக அவர் கைது செய்யப் பெற்றது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: முதலிலே ஒழுங்குப் பிரச்சனையை திரு. சாதிக் பாட்சா எழுப்பியபொழுது ''**..அவருடைய வீட்டின்கொல்லைப் புறத்தில் சிலை இருந்ததாக* * * *
அவர் கைது செய்யப்படுகிறார் என்றால் அவருக்குப் பாதுகாப்பு இல்லாமல் போய் விடுகிறது'' என்று குறிப்பிட்டார். நாமே முன் விட்டு சொல்ல வேண்டாமென்றும் அது வழக்குக்குப் பாதகமாக இருக்கும் என்பதாலேயும் அந்த வரிகளை நீக்க வேண்டுமென்று உத்தரவிடுகிறேன். பின்னாலே எதிர்க் கட்சித் தலைவர்

*மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

(7) அரசினர் தீர்மானம் தொடர்ச்சி.

விதி 2—உள்விதி (3)இன்கீழ்—

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசினர் தீர்மானம்—மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சரவர்கள்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு தலைவரவர்களே, பேரவையின் விதி 21 உள் விதி (3)-ன்கீழ், கீழ்க் கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்:—

இன்றைய நிகழ்ச்சி நிரலில் இனம் 5-ன்கீழ் கோரிக்கை எண் 10-பால் வழங்கு திட்டங்கள் என்றுள்ளதை கோரிக்கை எண் 26-கைத்தறியும், நெசவுத் தொழிலும் என்றுள்ள தற்கு முன்பாக எடுத்துக் கொள்ள வேண்டும்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, ஒரு மன தாக நிறைவேற்றப்பெற்றது.

8. வரவு செலவு திட்டம் 1979–80— வாக்கெடுப்பு (தொடர்ச்சி)

(உ) கோரிக்கை எண். 10—பால் வழங்கு திட்டங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து 1979-80 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: தலைவரவர்களே, ஆளுநர் அவர்களின் பரிந்துரையின் மேல், கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்:—

"மானியக் கோரிக்கை எண். 10—பால் வழங்கு திட்டங்கள் என்ற தலைப்பின்கீழ் ரூ. 95,36,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்."